# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

## அசல் வழக்கு எண்.9/2023

பெயர்-திரு. S.K.நாகராஜ் நாள்.27.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) வழக்குரையில் சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்தில் எந்த வித பிரச்சனையும் இல்லை என்றால், சரிதான். எனது சொத்திற்கு பக்கத்தில் பிரதிவதி சொத்து உள்ளது என்றால், சரிதான். எனது சொத்தின் ப.க.ச.எண்.7 சி என்றால், சரிதான். பிரதிவாதியின் சொத்தின் ப.க.ச.எண்.10 சி என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தை சர்வேயருடன் அளவீடு செய்ய ஆணையர் நியமனம் கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், ஏற்கனவே உட்பிரிவு செய்ய அளவீடு செய்யப்பட்டதால், மனு தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே உட்பிரிவு செய்தது தவறு என்று மறுஅளவீடு செய்ய வேண்டி பிரதிவாதி வருவாய்துறையினரிடம் ஆட்சேபணை மனு செய்து, அதில் நான் ஆஜரானேனா என்றால், அறிவிப்பு வந்தது விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆனால் எனது தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது என்றால், சரிதான். ஏற்கனவே அளந்தது தவறாக உள்ளதால்தான் நான் மறு அளவீடு செய்யவிடால் ஆட்சேபணை செய்தேன் என்றால், சரியல்ல. அதனால்தான் வழக்கு சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க முன்வரவில்லை என்றால், சரியல்ல.

2) அதனால் பிரதிவாதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பேராணை மனு எண்.36302/2025 என மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவின் உத்தரவில் தாவா சொத்தை 6 வார காலத்திற்குள் அளவீடு செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி தெரியாது. நான் சொல்வது தவறானது என்றும், மேற்படி மனுவில் நான் 4-ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றாலும், எனக்கு அதுபற்றி தெரியாது. நான் வழக்கிற்காக நீதிப்பேராணை மனு பற்றி தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதி சேலத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். பிரதிவாதி வெளியூரில் இருப்பதை பயன்படுத்திக் கொண்டு, அவரது சொத்தை அபகரிக்க வேண்டிதான், எனது அனுபவத்தில் இல்லாத சொத்தை அபகரிக்க வேண்டிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. விளம்புகை

பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.27 01:51:03 +0530

District Munsif